Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلّي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

இதழ் 21

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

28 ஷஃபான் 1438 ஹிஜ்ரி கமரி 25 ஹிஜ்ரத் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

25 மே 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து–லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப் பெற்ற மாதமாகும். குர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழி காட்டக் கூடியதும், நேர்வழியைத் தெளிவாக்கக் கூடியதும் [நன்மை தீமையை] பிரித்தறியக் கூடியதுமாகும். [திருக்குர்ஆன்]**

**ரமலான் மாதம் வரும்போது சுவர்க்கத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றன. நரகின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன. ஷய்த்தான் பிணைக்கப்படுகிறான். [நபிமொழி]**

**நோன்பு என்பதன் கருத்து மனிதன் உடலை மட்டும் வளர்க்கின்ற ஓர் உணவை விட்டு விட்டு ஆன்மாவின் திருப்தி, நிறைவிற்குக் காரணமாக இருக்கின்ற இன்னொரு உணவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். [வாக்களிக்கப்பட்ட மஸீஹ்]**

## இறைவனின் கட்டளை

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ﴿١٨٤﴾
فَاِنْ كَذَّبُوْكَ فَقَدْ كُذِّبَ رُسُلٌ مِّنْ قَبْلِكَ جَآءُوْ بِالْبَيِّنٰتِ وَالزُّبُرِ وَالْكِتٰبِ الْمُنِيْرِ ﴿١٨٥﴾
شَهْرُ رَمَضَانَ الَّذِيْٓ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ هُدًى لِّلنَّاسِ وَبَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ
فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ وَمَنْ كَانَ مَرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ
يُرِيْدُ اللّٰهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيْدُ بِكُمُ الْعُسْرَ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا
هَدٰىكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿١٨٦﴾ وَاِذَا سَاَلَكَ عِبَادِيْ عَنِّيْ فَاِنِّيْ قَرِيْبٌ اُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ
اِذَا دَعَانِ فَلْيَسْتَجِيْبُوْا لِيْ وَلْيُؤْمِنُوْا بِيْ لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ ﴿١٨٧﴾

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டதுபோன்று, உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் (ஆன்மீக, நல்லொழுக்கப் பலவீனங்களில் இருந்து) தவிர்ந்து கொள்ளலாம்.

(எனவே) கணிக்கப்பட்ட நாள்களில் (நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள்). உங்களுள் நோயாளியாகவோ, பயணத்திலோ இருப்பவருக்கு மற்ற நாட்களில் எண்ணிக்கை(யை நிறைவு செய்ய வேண்டியது) இருக்கும். மேலும் இதற்குரிய ஆற்றலைப் பெறாதவர்கள் பரிகாரமாக ஓர் ஏழைக்கு உணவளிப்பது கடமை ஆகும். ஒருவர் முழுமையாகக் கட்டுப்பட்டு ஒரு நற்செயல் செய்வார் எனில், அது அவருக்கு நன்றே. நீங்கள் அறிவுடையவர் என்றால், நோன்பு நோற்பது உங்களுக்குச் சிறந்தது.

ரமலான் மாதம் குறித்து திருக்குர்ஆன் இறக்கப்பட்டுள்ளது. (அந்த குர்ஆன்) எல்லா மனிதர்களுக்கும் நேர்வழி காட்டக்கூடியதாக (அனுப்பப்பட்டு) உள்ளது. அது தெளிவான சான்றுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. அந்த சான்றுகள் நேர்வழியை உருவாக்குகின்றன. மேலும் அத்துடன் (திருக் குர்ஆனில்) இறை அடையாளங்களும் உள்ளன. எனவே உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால் நோயாளியாகவோ பயணத்திலோ இருப்பவர் (விட்டுப்போன நோன்பை) மற்ற நாட்களில் கணக்கிட்டு (நோற்று)க் கொள்ள வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகின்றான். உங்களுக்குக் கடினத்தை விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையை முழுமை செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனின் பெருமையை எடுத்துரைப்பதற்-காகவும், நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவற்காகவுமே (இந்தக் கட்டளையை அவன் பிறப்பித்துள்ளான்).

(தூதரே!) என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் (அவர்களுக்கு) அருகில் இருக்கின்றேன்; பிரார்த்தனை செய்கின்றவர் என்னை அழைக்கின்றபோது நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே, அவர்களும் என் கட்டளையை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக).

## பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொன்மொழிகள்

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ரமலான் மாதம் வரும்போது சுவர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. நரகின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன. ஷய்த்தான் பிணைக்கப்-படுகின்றான். (புகாரி கிதாபுஸ்ஸவ்ம் பாபு யுகாலு ரமலான் அவ் ஷஹ்ரு ரமலான்)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ் கூறுகின்றான். மனிதனின் எல்லா பணிகளும் அவன் தனக்காகச் செய்வதாகும். ஆனால், நோன்பு எனக்காக நோற்கப்படுகின்றது. நான் சுயமே அதற்கான நற்கூலியை வழங்குவேன். அதாவது அவனது அந்த நன்மைக்குப் பதிலாக அவனுக்கு நான் எனது தோற்றத்தைக் காட்டுவேன். அல்லாஹ் கூறுகின்றான். நோன்பு கேடயமாகும். எனவே, உங்களில் ஒருவர் நோயாளியாக இருக்கும்போது அவர் வீணான விஷயங்களைப் பேச வேண்டாம். அவர் கூச்சலிட வேண்டாம். அவரை யாராவது ஏசினால் அல்லது அவரிடம் சண்டையிட்டால் அவர் அதற்குப் பதில் கூறும் வகையில் நான் நோன்பு நோற்றுள்ளேன் என்று கூறட்டும். முஹம்மது (ஸல்) அவர்களின் உயிர் எவனது பிடியில் இருக்கின்றதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நோன்பாளியின் வாயிலிருந்து வரும் வாடை அல்லாஹ்வின் பார்வையில் கஸ்தூரியை விட மிகவும் தூய்மையானதும் நறுமணமிக்கதுமாகும். ஏனென்றால், இறைவனுக்காக அவர் தனது நிலையை இவ்வாறு ஆக்கிக் கொண்டார். நோன்பாளிக்கென்று இரு மகிழ்ச்சிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மகிழ்ச்சி அவருக்கு நோன்பு திறக்கும் நேரத்தில் ஏற்படுகின்றது. இரண்டாவது மகிழ்ச்சி அவருக்கு

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

அல்லாஹ்வின் மாபெரும் அருளும் கருணையும் நம்மீது உள்ளது. அதனால் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். அன்னாரின் பைஅத்தில் இணைந்துள்ளோம். இது நமது ஈமான் அதிகரிக்கக் காரணமாக இருக்க வேண்டும். ஏனெனில், நாம் ஏற்றுக் கொண்ட பிறகு, நாம் நமது ஈமான் மற்றும் நிச்சய உறுதியில் வளர்ச்சி பெறவில்லை என்றால், இந்த ஏற்றுக் கொண்டதில் எந்தப் பயனும் இல்லை. அதே வேளையில் நாம் எந்தவொரு தாழ்வு மனப்பான்மையும், கோழைத்தனமும் இன்றி பகிரங்கமாக இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்துரைக்க வேண்டும்.

இங்கு வந்து மக்களுடன் சந்திப்பதிலும், நல்லொழுக்க மேம்பாட்டை அந்நியர்களிடம் காட்டுவதிலும் நமது அஹ்மதிகள் மிகவும் மேம்பட்டவர்கள். ஆனால், இறைவணக்கம் மற்றும் அல்லாஹ்வின் உரிமையை நிறைவேற்றுவதற்கு ஓர் அஹ்மதிக்கு இருக்க வேண்டிய தரம் அவர்களிடம் இல்லை.

அதேபோன்று ஒருவருக்கொருவர் உள்ள தொடர்பிலும் தரம் குறைவாக உள்ளது. பொறுப்பாளர்கள் மற்றும் மக்களுடன் கண்ணியத்துடன் நடந்து கொள்வதிலும் குறைபாடு உள்ளது. பல்வேறு இடங்களிலிருந்து புகார்கள் வருகின்றன. பொறுப்பாளர்களுக்கு உள்ளத்தில் மதிப்பளிக்கும் உணர்வுகளை வைத்திருப்பதன் தரம் மேம்பட வேண்டிய தேவை உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த ஜமாஅத்தை நிலைநாட்ட வந்தார்கள். அது கொள்கையை சீர்திருத்துவதற்காக மட்டுமல்ல. மாறாக, ஒவ்வொரு வட்டத்திலும் ஒவ்வோர் அடிப்படையிலும் செயல் சீர்திருத்தம் ஏற்படுத்தும் ஜமாஅத்தாக அது இருக்க வேண்டும். ஆகவே, இந்த அடிப்படையில் நம் ஒவ்வொருவரும் இதனைப் பெற முயற்சி செய்கிறோமா? இல்லையா? என்று நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

ஜமாஅத் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்ற முஸ்லிம் அல்லாத விருந்தினர்களுக்கு உண்மையான இஸ்லாத்தின் போதனைகள் பற்றி தெரிவிக்கின்ற போது அதன் ஆழமான தாக்கம் அவர்கள் மீது ஏற்படுகின்றது. அவ்வாறு சில விருந்தினர்களுக்கு ஏற்பட்ட தாக்கம் குறித்து ஹுஃஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

குறிப்பாக ஊடகங்களின் முயற்சி இவ்வாறு உள்ளது. அது இஸ்லாத்தின் நல்ல நிழற்படம் மக்கள் முன் ஒருபோதும் வந்து விடக் கூடாது என்பதாகும். எனவே, நமது பணி நாம் இந்த அன்பு, நேசம், சமாதானம் மற்றும் அல்லாஹ்வின் உரிமைகளையும் அடியாருக்குரிய உரிமைகளையும் செலுத்த வைக்கின்ற இந்த தூதுச் செய்தியைப் பரப்புவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும்.

இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற நூல் அந்நியர்கள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் பற்றி ஹுஃஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். படித்த மக்களிடம் அறிமுகம் ஏற்படும்போது இந்த நூலை அவர்களுக்கு கண்டிப்பாக கொடுக்க வேண்டும்.

இப்போது உண்மையான அறிவும் இஸ்லாத்தின் சரியான நிழற்படமும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களின் அறிவைப் பெறுவதன் மூலமே கிடைக்க முடியும். நினைவில் கொள்ளுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழங்கிய தீர்ப்பே அசல் தீர்ப்பாகும். அன்னாரின் நூல்களிலிருந்து பெற்ற அறிவின் அடிப்படையில் கலீஃபாக்கள் வழங்குகிற விரிவுரைகள்தான் அசல் விரிவுரைகளாகும். அவற்றைப் படித்து உங்களது அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இக்காலத்திற்கு நீதி நெறி தீர்ப்பவராக ஆக்கி அனுப்பப்பட்டுள்ளார்கள். இதனை நாம் எப்போதும் நம்முன் வைக்க வேண்டும்.

முதல் விஷயம், நான் ஏற்கனவே கூறியதுபோன்று நாம் எந்தத் தாழ்வு மனப்பான்மையும் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இரண்டாவது விஷயமாக இதனை நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விட்டுச் சென்ற படைப்புகள், நூல்களைப் படிப்பதும் அதனை அறிவதும்தான் நமக்கு இஸ்லாம் பற்றி கூறுகிறது. ஆகவே, நாமும் படித்து மற்றவருக்கும் கொடுக்க வேண்டும். எவருக்கு அழகிய தொடர்பு இருக்கிறதோ, எவர் நல்லியல்பு கொண்டவரோ அவருக்கு படைப்புகளைத் தருவது அவசியமாகும். அன்றாட விவகாரங்கள் மற்றும் பிரச்சனைகளில் இதில் இருந்தே நாம் சான்றுகளை வழங்க வேண்டும். இது அவசியமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நூல்கள் மற்றும் வழிகாட்டல்களில் எல்லா வகையான கேள்விகளுக்கும் பதில் வழங்கியுள்ளார்கள். எனவே, அவர்களின் நூல்களை வாசிக்க வேண்டும் என்று நான் கூறியிருந்தேன். இஸ்லாத்தின் மேன்மையை நிரூபிக்க அன்னாரின் நூல்களைப் படிப்பது மிகவும் அவசியமாகும். ஃபிக்ஹா விவகாரங்கள், அன்றாட விவகாரங்களுடன் தொடர்புடைய விஷயங்கள் அல்லது அறிவு சார்ந்த விபரங்கள் ஆகிய இவை அனைத்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களில் நமக்கு கிடைக்கின்றது. கலீஃபாக்கள் அதனை மேலும் விளக்கியுள்ளார்கள். இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதனைப் படிக்க வேண்டும். சிந்திக்க வேண்டும்.

---

அதேபோன்று சமூகத் தீமைகள் பற்றி நான் சுருக்கமாகக் கூறினேன். தமக்குள் அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றின் எந்த தரம் இருக்க வேண்டுமோ அந்த தரம் இல்லை. இன்னும் சொல்வதாயின், பொறாமையும், காழ்ப்புணர்ச்சியும் காணப்படுகிறது. எனவே ஒவ்வொருவரும் தமது உள்ளத்தின் ஆழத்தைப் பார்க்க வேண்டும். அவர் எப்படிப்பட்டவர் என்று பார்க்க வேண்டும். மற்றவரைப் பார்க்காதீர்கள். உங்களை நீங்களே பாருங்கள். உங்களை சீர்திருத்துங்கள்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுஉல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **ஜெர்மனியின் FrankFort -லுள்ள Raunheim என்ற இடத்தில் 21 ஏப்ரல் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **21 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

அல்லாஹ்வின் மாபெரும் அருளும் கருணையும் நம்மீது உள்ளது. அதனால் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். அன்னாரின் பைஅத்தில் இணைந்துள்ளோம். இது நமது ஈமான் அதிகரிக்கக் காரணமாக இருக்க வேண்டும். ஏனெனில், நாம் ஏற்றுக் கொண்ட பிறகு, நாம் நமது ஈமான் மற்றும் நிச்சய உறுதியில் வளர்ச்சி பெறவில்லை என்றால், இந்த ஏற்றுக் கொண்டதில் எந்தப் பயனும் இல்லை. அதே வேளையில் நாம் எந்தவொரு தாழ்வு மனப்பான்மையும், கோழைத்தனமும் இன்றி பகிரங்கமாக இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்துரைக்க வேண்டும்.

சில இளைஞர்கள், இளம்பெண்கள் இருவரிடமும் சில எண்ணங்கள் சில வேளைகளில் உருவாகி விடுகின்றன. அதாவது, முஸ்லிம்களின் நிலை இவ்வாறிருக்கும்போது குழப்பமும் கிளர்ச்சிகளும் அவர்களிடம் இருப்பதாக காட்டப்படும் நிலையில் நாம் இஸ்லாத்தைப் பற்றி அதிகமாக பேச வேண்டாம் என்ற எண்ணம் வருகிறது. அவர்களில் பெரும்பாலார் அல்லாஹ்வின் அருளால் மிகவும் செயற்துடிப்பு உள்ளவர்கள் ஆவர். பிரசுரங்கள் விநியோகம் செய்ததற்கான அறிக்கைகளிலிருந்து அவர்கள் பெரும் பங்காற்றி வருவதும் தெரிய வருகிறது. ஆனால், ஏதாவது ஒரு வகையில் தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகுபவர்களும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் உள்ளனர். முஸ்லிம் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால் அதனை வெளிப்படுத்த வேண்டிய அளவுக்கு வெளிப்படுத்துவதில்லை. அதே வேளையில் மற்ற முஸ்லிம்களின் செயலிலிருந்து நமக்கு மேலும் தைரியம்தான் உருவாக வேண்டும். உண்மையான போதனையை உலகிற்குக் காட்ட வேண்டும்.

இப்போது முஸ்லிம்களின் நிலைதான் இஸ்லாத்தின் உண்மைக்கு ஆதாரமாகும். ஏனெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருந்தார்கள். ஒரு காலம் வரும். முஸ்லிம்களிடம் வழிகேடு ஏற்படும். குழப்பம் ஏற்படும். பெயர் தாங்கி ஆலிம்கள் அதற்கு பொறுப்பாளியாக இருப்பர். முஸ்லிம்களிடம் உலகம் மிகைத்து நிற்கும். அப்போது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் தோற்றம் நிகழும். அவர் இஸ்லாத்தின் உண்மையான தோற்றத்தை உலகின் முன் எடுத்து வைப்பார். இஸ்லாத்தின் உண்மையான போதனையை உலகில் பரப்புவார். நாம் அஹ்மதிகள் ஆவோம். அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டிருப்

–பவர்கள் ஆவோம். உண்மையான இஸ்லாத்தின் போதனை அதன் அழகிய வடிவத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்குக் காட்டினார்கள்; கற்பித்தார்கள். அதனை நாம் செயல்படுத்துபவர் –களாவோம். ஆகவே, நாம் எந்த தாழ்வு மனப்பான்மையும் அடைய வேண்டிய அவசியம் இல்லை.

அதேபோன்று இன்னும் சிலர் உலகியல் சூழ்நிலையின் தாக்கத்தின் கீழ் வந்தவாறு இந்த மேற்கத்திய நாடுகளுக்கு வந்து உலகச் சூழலில் அதிகமாக மூழ்கி விட்டனர். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவதாக வாயளவில் வாக்குறுதி தருகிறார்கள். உண்மையில் அவர்களது செயல் அதற்கு வேறுபட்டு உள்ளது. இங்கு வந்து மக்களுடன் சந்திப்பதிலும், நல்லொழுக்க மேம்பாட்டை அந்நியர்களிடம் காட்டுவதிலும் நமது அஹ்மதிகள் மிகவும் மேம்பட்டவர்கள். ஆனால், இறைவணக்கம் மற்றும் அல்லாஹ்வின் உரிமையை நிறைவேற்று –வதற்கு ஓர் அஹ்மதிக்கு இருக்க வேண்டிய தரம் அவர்களிடம் இல்லை. அதேபோன்று ஒருவருக் –கொருவர் உள்ள தொடர்பிலும் தரம் குறைவாக உள்ளது. பொறுப்பாளர்கள் மற்றும் மக்களுடன் கண்ணியத்துடன் நடந்து கொள்வதிலும் குறைபாடு உள்ளது. பல்வேறு இடங்களிலிருந்து புகார்கள் வருகின்றன. பொறுப்பாளர்களுக்கு உள்ளத்தில் மதிப்பளிக்கும் உணர்வுகளை வைத்திருப்பதன் தரம் மேம்பட வேண்டிய தேவை உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த ஜமாஅத்தை நிலைநாட்ட வந்தார்கள். அது கொள்கையை சீர்திருத்துவதற்காக மட்டுமல்ல. மாறாக, ஒவ்வொரு வட்டத்திலும் ஒவ்வோர் அடிப்படையிலும் செயல் சீர்திருத்தம் ஏற்படுத்தும் ஜமாஅத்தாக அது இருக்க வேண்டும். ஆகவே, இந்த அடிப்படையில் நம் ஒவ்வொருவரும் இதனைப் பெற முயற்சி செய்கிறோமா? இல்லையா? என்று நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

ஜெர்மனியில் எங்கெல்லாம் மஸ்ஜிதுகள் உருவாகின்றனவோ, ஜமாஅத் நிலைநாட்டப்படு –கின்றனவோ அங்கெல்லாம் ஜமாஅத்தின் அறிமுகம் அதிகமாகிறது. அத்துடன் நம்மீது உலகின் குறை காணும் பார்வையும் அதிகமாகும் என்பது இயல்பான விஷயமாகும். நமது எண்ணிக்கை அதிகமாகும்போது உலகில் நமது அறிமுகமும் ஏற்படும். உலகில் அறிமுகம் ஏற்படும்போது குறை காணும் பார்வையும் அதிகமாகும். அதிகமாகிக் கொண்டும் இருக்கும். இது நம்மிடம் ஒரு விஷயத்தை வேண்டுகோள் விடுக்கிறது. அது, நம்மில் ஒவ்வொருவரும் நமது செயலின் நிலையை வளர்க்க வேண்டும் என்பதேயாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பைஅத்தின் நோக்கத்தை நிறைவேற்றுங்கள். நான் எப்போதும் கூறுகின்றேன்; நினைவூட்டுகின்றேன். அஹ்மதிகள் இந்த நாட்டிற்க வந்து குடியேறியவர் –களுள் குறைந்தபட்சம் 94.9 சதவிகிதம் பேருக்கு இங்கு குடியேற அனுமதி கிடைத்துள்ளது என்பது அவர்களின் சொந்த சிறப்பினால் அல்ல. மாறாக, அஹ்மதிய்யத்தின் காரணமாக கிடைத்ததாகும். இந்த அடிப்படையில் இங்கு வந்து குடியேறியுள்ள ஓர் அஹ்மதி, அஹ்மதிய்யத்தின் ஒரு மவுனமான முபல்லிக்கும் ஆவார். அல்லாஹ்வின் அருளால் இங்கு பெரும்பாலான அஹ்மதிகளின் நல்ல முன்மாதிரி மற்றும் நல்ல தொடர்புகளின் காரணமாக மக்களுக்கு ஜமாஅத்தின் மீது நல்ல தாக்கம் உள்ளது. இதனை பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தவும் செய்கிறார்கள். இவ்வாறு சில நாட்களில் பல்வேறு நரகங்களில் இங்கு பள்ளிவாயில் திறப்பு விழா மற்றும் பள்ளிவாயிலின் அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சிகள் நடத்தும் வாய்ப்பும் கிடைத்தது. அங்கு உள்ளூர் மக்களின் பங்களிப்பு, ஜமாஅத் பற்றி மக்கள் தமது எண்ணத்தை வெளிப்படுத்தியது, நிர்வாகத்தாலும் மற்றும் அரசியல்வாதிகளாலும் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் அனைத்துமே உள்ளூர் அஹ்மதிகள் பற்றி உள்ளூர் மக்களுக்கு நல்ல தாக்கம் ஏற்பட்டுள்ளதை உண்மைப்படுத்தியது. இஸ்லாத்தின் உண்மையான போதனையின் அறிமுகம் எவ்வாறு ஏற்பட வேண்டுமோ அந்த அளவுக்கு இல்லை. ஏனெனில், நான் இஸ்லாத்தின் போதனையின் அடிப்படையில் பேசியபோது அதிகமானவர்கள் என்னிடம், இஸ்லாத்தின் இந்த போதனை எங்களுக்கு தெரியாமல் இருந்தது என்று கூறினர். மக்கள் வெளிப்படையாகவே இஸ்லாத்தின் உண்மையான போதனை எமக்கு மறைவாகவே இருந்தது. எமது மனதில் இஸ்லாத்தின் வடிவம் ஊடகங்கள் காட்டிய விதத்தில் இருந்தது. சந்தேகமின்றி எங்களுக்கு இப்பகுதியின் சில அஹ்மதிகளின் அறிமுகம் இருந்தது. அவர்களின் அழைப்பின் பேரில் நாங்கள் இங்கு வந்து விட்டோம். ஆனால், எங்களது மனதில் சில பாதுகாப்பு உணர்வு இருக்கிறது. ஒருவருடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு வைப்பது முற்றிலும் வேறு விஷயமாகும். ஜமாஅத் அளவில் ஒரு நிகழ்ச்சிக்கு அழைப்பதும், அழைத்து வருவதும் ஜமாஅத்தை அடிப்படையாகக் கொண்டு பேசுவதும் முற்றிலும் வேறு விஷயமாகி விடுகிறது.

இவர் நமது நண்பரும், தனிப்பட்ட முறையில் நல்ல மனிதரும் ஆவார் என்பது சரிதான். ஆனால் ஜமாஅத் அளவில் இவர்கள் எப்படிப்பட்டவர்கள்? என்ன சிந்தனை கொண்டவர்கள்? இவர்களும் கடுமை காட்டும் மக்களாக இருக்கக் கூடதே? என்று மக்கள் நினைக்கின்றனர். எனவே, மக்களின் உள்ளத்தில் சில பாதுகாப்பு உணர்வுகள் இருந்தன. இந்த பொதுவான தாக்கங்கள் பாதுகாப்பு உணர்வுகள் உலகில் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள முஸ்லிம் அல்லாதவர்களிடமும் நாம் காண்கிறோம். முஸ்லிம்களின் நிகழ்ச்சிக்கு நாம் போனால் என்ன நடக்குமோ? தீவீரவாதத்தை எதிர் கொள்ள வேண்டியது வருமோ? என்பதும் தெரியாது.

இவர்கள், தங்களது கருத்தை பல்வேறு இடங்களில் வெளிப்படுத்தினார்கள். உங்கள் நிகழ்ச்சிக்கு வந்தபோதுதான் எங்களது சிந்தனை முற்றிலும் தவறாகும். இஸ்லாம் ஓர் அமைதி நிறைந்த, அன்பு காட்டும் மார்க்கம்; அன்பை பரப்பும் மார்க்கம் என்பது தங்களின் பேச்சைக் கேட்ட பிறகு எங்களுக்குத் தெரிய வந்தது என்று இவர்கள் கூறினர்.

சில மக்களின் செயலை இஸ்லாத்தின் பக்கம் சுட்டிக் காட்டக் கூடாது. இங்கும் கூட பல்வேறு நிகழ்ச்சிகளிலிருந்து நமக்கு தெரிய வருவது என்னவென்றால், இன்னும் உலகில் மற்ற இடங்களிலும் அத்தகைய மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் கூறுகின்றனர்: உங்களது பேச்சைக் கேட்டு இஸ்லாம் பற்றிய எங்களது சந்தேகங்கள் மட்டும் அகலவில்லை. இஸ்லாம் பற்றிய எங்களது எச்சரிக்கை உணர்வும், சந்தேகங்கள் மட்டும் அகலவில்லை. இங்கும் கூட சிலர் இதனை கூறியிருந்தனர். எங்களுக்கு எப்போதாவது ஒரு மார்க்கத்தை நோக்கி வருவதற்கு கவனம் ஏற்படும் என்றால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் பக்கமே வருவோம். இஸ்லாத்தின் கருத்துக்களை நம்மிடமிருந்து கேட்டு எவ்வாறு மக்கள் தமது எண்ணங்களை மாற்றிக் கொள்கின்றனர்.

இதற்கு சில உதாரணங்களை நான் கூறுகிறேன். அநேகமாக முதல் மஸ்ஜித் வால்ஷெட் உடைய மஸ்ஜித் ஆகும். அங்கு வந்திருந்த சைமன் கிளாஸ் என்ற ஒருவர் கூறினார்: இஸ்லாம் பற்றிய எனது கருத்து இன்று முற்றிலும் மாறி விட்டது. ஜிஹாது உடைய உண்மையான பொருள் இன்று தான் தெரிய வந்தது. ஜிஹாது உடைய இந்த உண்மையான பொருளுக்குப் பிறகு ஜிஹாது என்ற சொல்லைக் கேட்டு பயப்படத் தேவையில்லை. பயப்பட வேண்டிய விஷயமும் அல்ல. நான் இங்கு வருவதற்கு முன் எனது கருத்து என்னவென்றால், இங்கு என்மீது தீவிரவாதத் தாக்குதல் ஏதும் ஏற்படக்கூடும் என்று பயந்து கொண்டிருந்தேன். எனவே, நான் முதலில் அழைப்பிற்குப் பிறகு இங்கு வர வேண்டாம் என்று முடிவெடுத் திருந்தேன். பிறகு எனது ஒரு நண்பர் ஜமாஅத்தைப் பற்றி வலைதளத்தின் மூலம் சில விஷயங்களை அறிந்திருந்தார்; வீடியோ பதிவுகளையும் பார்த்திருந் –தார். அவர்தான் எனக்கு இம்மக்கள் மிகவும் அமைதி நிறைந்தவர்கள் என்று கூறினார். எனவே, இவர்களது நிகழ்ச்சிக்குச் செல்லுங்கள்; எந்தத் தீங்கும் இல்லை. பிறகும் நான் பயந்து கொண்டுதான் இருந்தேன் என்று கூறுகிறார். ஆனால், நன்றி கூறுகிறேன். நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விட்டேன். கலந்து கொண்ட பிறகுதான் எனக்கு தெரிய வந்தது. நீங்கள் வாழ்வை எடுப்பவர்கள் அல்ல; வாழ்வை வழங்குபவர்கள் ஆவீர்கள். மனிதாபிமானம், படைப்பின சேவை ஆகியவை மூலமாக உலகிற்கு வாழ்வை வழங்குபவர்கள் ஆவீர்கள்.

ஒரு டாக்டர் பிரைஸ்ஸே ஃபிரான்ஸ், இன்று நான் பார்த்த இஸ்லாம் வெறுப்பின் மூலம் பரவக் கூடியதல்ல; அன்பினால் பரவிக் கொண்டிருக்கிறது என்று கூறினார். இரண்டாவது மஸ்ஜிது திறப்பு விழாவின்போது ஒரு பெண்மணி, நான் கேட்ட விஷயங்கள் மற்ற முஸ்லிம் தலைவர்களிடமிருந்து கேட்டதில்லை என்று கூறினார். இன்னொரு பெண்மணி, இன்று எனக்கு தெரிய வந்தது இஸ்லாம் ஓர் அமைதி நிறைந்த கருணை காட்டக் கூடிய மார்க்கமாகும். இஸ்லாம் அண்டை அயலாரின் உரிமைகளை எந்த அளவுக்கு பாதுகாக்கிறது என்பது தெரிய வந்தது.

சிரியாவைச் சார்ந்த ஒரு முஸ்லிம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அவர் கூறினார்: இன்றைய நாள் என்னைப் பொருத்தவரையில் மிகவும் உணர்வுப்பூர்வமான நாளாகும். இங்கு வருவதற்கு முன், அஹ்மதிகள் முஸ்லிம்கள் அல்ல; அவர்களின் திருக்குர்ஆன் வேறு என்று கூறப்பட்டது அல்லது பொதுவாக கூறப்படும் கற்பனை இதுவாகும். ஆனால், இவை அனைத்தும் பொய்யாகும் என்பது இன்று தெரிய வந்தது. அஹ்மதிகள் மற்ற முஸ்லிம்கள் நம்புகிற அதே குர்ஆனைப் படிக்கின்றனர். அதே ரஸூலை நம்புகின்றனர். பிறகு அவர் கூறினார்: காலத்தின் கலீஃபாவை சந்தித்த பிறகு நான் அஹ்மதியாவதும் மிகவும் சாத்தியமேயாகும்.

இதே சிந்தனை இங்கு அடிக்கல் நாட்டப்பட்ட இடத்திற்கு வந்த விருந்தாளிகளிடமும் இருந்தது. அதேபோன்று மால்பெர்கிலும் மால்பெர்ட் University –யின் Vice Chanceller கூறினார்: இப்போது நான் முழுமையான உணர்வுகளால் நிரம்பியுள்ளேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபாவின் வார்த்தையைக் கேட்டு, குறிப்பாக நான் எனது உரையில் இரு ஜன்னத்துகளைப் பற்றி எடுத்துக் கூறியிருந்தேன். இவ்வுலகிலும் ஒரு ஜன்னத் உள்ளது. மறுவுலகிலும் ஒரு ஜன்னத் உள்ளது என்று இஸ்லாம் கூறுகிறது என்று குறிப்பிட்டிருந்தேன். அதனை சுட்டிக் காட்டியவாறு கூறுகிறார்: இந்த விளக்கத்தைக் கேட்டு நான் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானேன். இதுவும் எவ்வாறு மனிதன் மறுவுலகின் ஜன்னத்திற்கு முன்னோடியாக இருக்கக் கூடிய ஒரு ஜன்னத்தை இவ்வுலகிலும் பெற முடியும் என்ற கருத்தும் என்னைக் கவர்ந்தது. அதேபோன்று அவர் கூறினார்: இன்றும் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றியும், இஸ்லாத்தின் ஆரம்ப கால வரலாறு பற்றியும் தெரிய வந்தது. எவ்வாறு இஸ்லாம் உரிமைகளை வழங்குவதற்கு போதிக்கிறது? இவை அனைத்தையும் உலகம் விளங்கிக் கொண்டால் உலகில் அமைதி, நேசம், சகோதரத்துவம் நிலைபெறும் என்று கூறினார். அவர் எந்த அளவுக்கு உணர்ச்சி பொங்கியவராக இருந்தார்

என்றால், அவரிடம் பேசிய நபர் கூறுகிறார்: இதனை விட அதிகமாக கூறுவதற்கு என்னிடம் சக்தியில்லை என்று அழுதவாறு அவர் கூறினார்.

ஒரு கிறித்தவப் பெண் இஸ்லாமிய நிகழ்ச்சிக்கு வருகிறார். அவருக்கு முதலில் இஸ்லாமிய போதனை பற்றி தெரியாது. அமீர் சாஹிப் என்னிடம் கூறினார். இவருக்கு அறிமுகம் இல்லை. ஆனால் அவர் தேடிக் கொண்டிருக்கிறார். Vice Chancellor நல்ல படித்த பெண்மணி ஆவார். ஆனால் பேச்சைக் கேட்ட பிறகு எந்த அளவுக்கு உணர்வுப்பூர்வமாகி விட்டால் என்றால் அவரால் உணர்வை அடக்கவே முடியவில்லை. அத்தகைய அழகிய போதனை இஸ்லாத்தினுடையதாகும். எனவே, எந்த வகையான தாழ்வு மனப்பான்மையோ, காம்ப்ளக்ஸோ அடைவதற்கு எந்தக் காரணமும் இல்லை.

ஒரு பெண்மணி மிஸ். எஸ்தர் கூறினார்: இன்று உங்கள் கலீஃபா இங்கு என் உள்ளத்திலிருந்த எனது எல்லா கேள்விகளுக்கும் பதில் தந்து விட்டார்கள். நான் இத்தனை அழகான விஷயங்கள் கேட்டேன். இதனைக் கேட்டு விட்டு நான் வீட்டிற்குப் போகிறேன். ஆனால், இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தக் கூடிய ஒரு மனிதர் எழுந்து நாளைக்கே கூட இஸ்லாத்தின் பெயரால் தீவிரவாதத் தாக்குதல் நடத்துவது ஒரு தூரமான காரியமல்ல என்பதுதான் எனக்குள்ள அச்சமாகும். மக்கள் இஸ்லாத்தின் இந்த அமைதி நிறைந்த போதனையை மறந்து விட்டு அதன் பக்கம் கவனம் செலுத்தத் தொடங்கி விடுவார்களே என்பதுதான் வேதனையாகும். இதுவே எனக்கு கஷ்டமாக உள்ளது. இத்தகைய உணர்வு மக்களின் உள்ளங்களில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று எல்லா பக்கமும் இதுபோன்ற எண்ணற்ற கருத்துக்கள் வந்தன.

இந்தப் பெண்மணி கூறியதுபோன்று, அமைதி நிறைந்த போதனையை மறந்து விடுவார்கள் என்பதே உண்மையாகும். இவ்வாறுதான் நடக்கிறது. குறிப்பாக ஊடகங்களின் முயற்சி இவ்வாறு உள்ளது. இஸ்லாத்தின் நல்ல நிழற்படம் மக்கள் முன் ஒருபோதும் வந்து விடக் கூடாது என்பதாகும். எனவே, நமது பணி நாம் இந்த தூதுச் செய்தியை அன்பு, நேசம், சமாதானம் மற்றும் அல்லாஹ்வின் உரிமைகளையும் அடியாருக்குரிய உரிமைகளையும் செலுத்த வைக்கின்ற இந்த தூதுச் செய்தியைப் பரப்புவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். இஸ்லாத்தின் பெயரால் சில பெயர் தாங்கி முஸ்லிம்கள் செய்கின்ற ஒவ்வோர் எதிர்மறையான செயலுக்குப் பிறகும் இந்த தூதுச் செய்தியைப் பரப்ப முயற்சி செய்ய வேண்டும். இஸ்லாத்தின் நேர்மறைப் போதனைகளை உலகின் முன் எடுத்து வைக்க வேண்டும். எவர்கள் நமது விருந்தாளிகளாக பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு வந்துள்ளார்களோ மக்களுடன் தொடர்பும் வைத்துள்ளார்களோ அவர்களுடன் தொடர்ந்து தொடர்பு வையுங்கள். அவர்களிடம் ஏற்பட்ட தாக்கங்கள் அனைத்தும் ஏன் ஏற்பட்டன? காரணம் என்ன? மற்ற முஸ்லிம்கள் ஓதுகின்ற அதே குர்ஆனைத்தான் நாமும் ஓதுகின்றோம். மற்ற முஸ்லிம்கள் தொழுவது போன்றுதான் நாமும் தொழுகிறோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த ஷரீஅத்தைத்தான் நம்புகிறோம். அன்னாரை இறுதி நபி என்று நம்புகிறோம். இருந்தும் இவை அனைத்து தாக்கங்களும் உருவாகக் காரணம் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். நான் கூறியதுபோன்று அன்னார் இஸ்லாத்தின் உண்மை நிலையை நம்முன் திறந்து தந்துள்ளார்கள். இந்த உண்மை திருக்குர்ஆனின் போதனையைப் பரப்புவதுதான் ஒவ்வோர் அஹ்மதியின் கடமையும் ஆகும். எங்கு நாம் நமக்குள் செயல் மாற்றங்களை ஏற்படுத்துகிறோமோ அதே வேளையில் நாம் அன்னாரின் எழுத்துக்களை பரப்ப வேண்டிய தேவையும் உள்ளது. இது நமது பணியாகும்; நமது பொறுப்பாகும்.

நான் ஏற்கனவே கூறியது போன்று மார்ஸர்கில் பள்ளிவாயிலின் அடிக்கல் நாட்டு விழா நடத்தப்பட்டது. அங்கு வந்த விருந்தாளிகளுள் பல்வேறு பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், மாணவர்களும் அடங்குவர். Cice Chanceller –ம் வந்திருந்தார். அவரது கருத்துக்களை நான் கூறியிருந்தேன். அங்கு யுனிவர்சிட்டியின் இரு எகிப்து பேராசிரியர்களும் வந்திருந்தனர். அவர்கள் இஸ்லாம் பற்றியும், அரபியையும் கற்பிப்பவர்கள் அவர்களுள் ஒருவர் இஸ்லாமிய பிலாசஃபியை கற்பிக்கிறார். அவரிடம் நான் கூறினேன். நீங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூலான இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் படித்துள்ளீர்களா? அவர் இல்லை என்றார். நான் கூறினேன். அதனை கண்டிப்பாக படியுங்கள். ஏனெனில் அதுவல்லாமல் நீங்கள் இஸ்லாமிய போதனையின் பிலாசஃபியின் அறிவைப் பெற்று விடவே முடியாது. எவ்வளவுதான் மற்ற இடத்திலிருந்து நீங்கள் அறிவைப் பெற்றிருந்தாலும் சரியே. எனக்கு வியப்பு ஏற்பட்டது. நேஷனல் இஷாஅத் செயலர் அவரை அழைத்து வந்திருந்தார். அநேகமாக யுனிவர்சிட்டியில் அவர்களின் ஒருவர் மாணவராக இருந்துள்ளார். இருந்தும் கூட அவர் என்ன கற்பிக்கிறார்? எதில் அவருக்கு ஆர்வம் உள்ளது? என்பதெல்லாம் தெரிந்துருந்தும் கூட அவருக்கு இந்த நூலை அவர் கொடுத்திருக்கவில்லை. எவ்வாறிருப்பினும், நான் அவரிடம் உடனே இந்த நூலைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றேன். நேற்று அவருக்கு அந்த நூல் அனுப்பட்டதாக தகவலும் வந்தது. அவருக்கு அரபி மொழியில் அனுப்பி இருக்க வேண்டும். அவரது மொழியில் அவருக்கு இன்னும் அதிகமாக புரியவும் செய்யும். இது எத்தகைய நூல் என்றால் நிறைய அரபிகள் என்னிடம், இந்நூலை படித்து விட்டுதான் எமக்கு சரியான இஸ்லாமிய போதனை தெரிய வந்தது என்று எழுதுகிறார்கள். மற்ற மக்களும் பல கிறித்தவர்களும் கூட இது எமது வாழ்க்கையையே புரட்டிப் போட்டு விட்டது என்று எழுதுகின்றனர்.

கண்ணியத்திற்குரிய மர்ஹூம் முஸ்தஃபா ஸாபித் சாஹிப் ஜமாஅத்தின் பெரிய ஆலிமாக இருந்தார். ஆழமான அறிவுடையவர். இன்னும் சொல்வதாயின், இஸ்லாம் பற்றியும் ஆழமான அறிவுள்ளவர். அவரும் கூட கூறியுள்ளார். அவரை அஹ்மதியத்திற்கு எடுத்து வந்ததில் இந்நூல் பெரும் பங்காற்றியுள்ளது. ஆகவே, பெரும் படித்த மனிதர்களுடன் தொடர்பிருந்தால் அவர்களுக்கு கண்டிப்பாக இந்த நூலைக் கொடுக்க வேண்டும். நமது சில யுனிவர்சிட்டியில் படிக்கும் மாணவர்கள் பழைய அறிஞர்களின் நூல்களைப் படித்து அல்லது பழைய இமாம்கள் அல்லது வலிமார்களைப் பற்றிப் படித்து விட்டு தமது அறிவு மிக அதிகமாகி விட்டது என்றும் தமது அறிவுடன் எவரும் போட்டி போட முடியாது என்றும் கருதுகின்றனர். ஒருவேளை அந்த விஷயங்களில் அவர்களின் அறிவு அதிகமாக இருக்கலாம். ஆனால் அந்த விஷயங்களில் அதிகமான அறிவு அஹ்மதியல்லாத ஆலிம்களுக்கு உள்ளது. எனவே அதனைப் படித்து விட்டு நாம் பெரிய ஆலிமாகி விட்டோம் என்று நினைக்க வேண்டாம். எவரது மூளையில் இந்த புழு இருக்குமோ அதனை அகற்றி விட வேண்டும். பழைய ஆலிம்கள் அவ்லியாக்களின் நினைவை விடுங்கள். இப்போது உண்மையான அறிவும் இஸ்லாத்தின் சரியான நிழற்படமும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களின் அறிவைப் பெறுவதன் மூலமே கிடைக்க முடியும்.

நினைவில் கொள்ளுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழங்கிய தீர்ப்பே அசல் தீர்ப்பாகும். அன்னாரின் நூல்களிலிருந்து பெற்ற அறிவின் அடிப்படையில் கலீஃபாக்கள் வழங்குகிற விரிவுரைகள்தான் அசல் விரிவுரைகளாகும். அவற்றைப் படித்து உங்களது அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இக்காலத்திற்கு நீதி நெறி தீர்ப்பவராக ஆக்கி அனுப்பப்பட்டுள்ளார்கள். இதனை நாம் எப்போதும் நம்முன் வைக்க வேண்டும். எனவே அன்னார் கூறிய விஷயங்களே உண்மையாகும். அதுவே இஸ்லாமிய போதனையின் உண்மையாகும். மற்ற ஆலிம்களின் நூல்களையும், மார்க்க அறிஞர்களின் நூல்களையும், பழைய இமாம்களின் நூல்களையும் படித்து விட்டு ஆலிம் ஆகி விட்டோம் என்று கருத வேண்டாம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களைப் படிக்காமல் ஒருவர் ஆலிம் ஆக முடியாது. அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இக்காலத்தைச் சீர்திருத்துவதற்காக அனுப்பினான். பிறகு அன்னாருக்கு நேரடியாக அறிவையும் வழங்கினான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஒருவர் ஈமான் கொள்கிறார். பிறகு அந்த ஈமானில் நிச்சய உறுதி மற்றும் இறைஞானம் வரை முன்னேற வேண்டும். அதுவல்லாமல் அவர் பிறகு யூகம் பயன்படாது. இறைவனே கூறுகின்றான்: இன்னல் ழன்ன லா யுக்னி மினல் ஹக்கி ஷய்ஆ – வெறும் யூகம் உண்மைக்கு எதிரில் எந்தப் பயனும் தராது. (10:37) கூறுகிறான்: யகின் என்பது எத்தகையது என்றால் அதுவே மனிதனுக்கு வெற்றியை வழங்கும். யகின் இல்லாமல் எதுவும் நடக்காது. மனிதன் ஒவ்வொரு விஷயத்திலும் தவறான எண்ணம் கொள்ள ஆரம்பித்தால் ஒரு வினாடி கூட வாழ இயலாது. அதற்கு உதாரணம் தந்தவாறு கூறுகிறார்கள்: தண்ணீரில் விஷம் கலந்திருக்கலாம் என்பதற்காக தண்ணீர் கூட குடிக்க இயலாது. அதில் அழிக்கக் கூடிய விஷம் இருக்க கூடாதே? என்பதற்காக கடைத்தெருவில் உள்ள எதனையும் வாங்கி உண்ண இயலாது.

பிறகு அவர் எவ்வாறு உயிர் வாழ முடியும்? இது பெரிய ஓர் உதாரணம் ஆகும். அதேபோன்று மனிதன் ஆன்மீக விவகாரத்தில் இதிலிருந்து பயனடைய முடியும். இப்போது நீங்களே சிந்தியுங்கள். தமது உள்ளத்திலேயே முடிவு செய்யுங்கள். நீங்கள் எனது கையில் பைஅத் செய்துள்ளீர்கள். என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி என்று நம்பியுள்ளீர்கள் எனில் இதனை ஏற்றுள்ளீர்கள் எனில் எனது ஏதாவது ஒரு செயல் குறித்து உள்ளத்தில் ஐயம் ஏற்படுகிறது எனில் உங்கள் ஈமானைப் பற்றி கவலைப்படுங்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: அந்த ஈமான் ஐயங்களால் நிறைந்தது. அது எந்த நல்ல விளைவையும் உருவாக்காது. ஆனால், நீங்கள் உண்மையான உள்ளத்துடன் ஈமான் கொண்டு இருக்கிறீர்கள் எனில், மஸீஹ் மவ்வூது உண்மையில் நீதி நெறி தீர்ப்பவர் என்று ஈமான் கொண்டிருக் கிறீர்கள் எனில் அவரது கட்டளை மற்றும் செயலுக்கு முன் உங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டு விடுங்கள். மவுனமாக கூறப்பட்டதை ஏற்றுக் கொள்ளுங்கள். இந்த அருளைக் கண்ணியமான பார்வையினால் காணுங்கள். அதன் மூலம் நீங்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய தூய வார்த்தைகளுக்கு கண்ணியமும் மகத்துவமும் தருபவராக ஆகுங்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சாட்சியம் அவருக்கு போதுமானது. அவர்கள் ஆறுதல் வழங்குகிறார்கள். மஸீஹ் மவ்வூது வருவார். அவர் உங்களுக்கு இமாம் ஆக இருப்பார். அவர் நீதி நெறி தீர்ப்பவர் ஆக இருப்பார். அதில்

உங்களுக்கு ஆறுதல் இல்லையெனில் வேறு எப்போது ஏற்படப் போகிறது?

அவர்கள் கூறுகிறார்கள்: ஈமானும், உள்ளத்தில் ஓர் ஓரத்தில் தவறான எண்ணமும் கொண்டிருப்பது ஆகிய இந்த நடைமுறை ஒருபோதும் நல்லதோ வாழ்த்துக்குரியதோ அல்ல. நான் உண்மையாளன் இல்லை என்றால் பிறகு வேறு ஓர் உண்மையாளரைத் தேடுங்கள். நிச்சயமாக புரிந்து கொள்ளுங்கள். வேறு ஓர் உண்மையாளரை சந்திக்கவே முடியாது. மற்ற உண்மையாளன் கிடைக்காத போது கிடைக்கவே மாட்டார். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனக்கு வழங்கிய உரிமையை மட்டுமே நான் உங்களிடம் வேண்டுகிறேன். எவர் என்னை மறுத்தாரோ, எவர் என்மீது ஆட்சேபனை செய்கிறாரோ அவர் என்னைக் கண்டறியவில்லை. எவர் என்னை ஏற்றுக் கொண்டள்ளாரோ, பைஅத்தில் வந்து விட்டாரோ பிறகு ஆட்சேபனை வைத்துள்ளாரோ அவர் மேலும் பேரிழந்தவர் ஆவார். அவர் பார்த்து விட்டும் குருடாகி விட்டார். இது மிக முக்கியமான விஷயமாகும். ஏற்றுக் கொண்ட பிறகும் உள்ளத்தில் சில சந்தேகங்களையும் கொண்டிருப்பவர் பார்த்து விட்டும் குருடாகி விட்டவர் ஆவார். அதிகமான பாவம் செய்தவாகிறார்.

பிறகு அவர்கள் கூறுகிறார்கள்: அசல் விஷயம் என்னவெனில் சமூகம் அசல் தகுதியை அழித்து விடுகிறது. ஒரு சூழ்நிலையில் ஒன்றாக இருப்பதனால் மனிதனால் ஒருவரது அந்தஸ்தைக் கண்டுணர முடிவதில்லை. அன்னார், ஈஸா (அலை) அவர்களுடைய உதாரணம் தருகிறார்கள். எனவேதான் ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள், நபிக்கு தனது ஊரில் மதிப்பு இல்லை என்று கூறுகிறார்கள். இதிலிருந்து அவர்களது சொந்த நாட்டுக்காரர்களால் அவர்கள் என்னென்ன துன்பங்களைச் சந்திக்க நேர்ந்தது என்பதை அறிய முடிகிறது. எனவே அன்பியா அலைஹிமுஸ் ஸலாம் உடன் ஒரு சுன்னத் தொடர்கிறது. நாம் அதிலிருந்து எவ்வாறு தனித்திருக்க முடியும்? ஆகவே சிலர் ஆட்சேபனை செய்கிறார்கள். அஹ்மதிய்யத்தின் மீது ஆட்சேபனை செய்கிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாதத்தை ஆட்சேபனை செய்பவர்கள், இவர்களை இவர்களது சமுதாயத்தின் ஆலிம்களே மறுத்து விட்டனர் என்று கூறுகின்றனர். இவர்கள் முஸ்லிம் அல்லாதவர்கள் என்று அஹ்மதிகள் மீது தீர்ப்பளித்து விட்டனர் என்கின்றனர். இதில் அரபிகளும் பிற சமுதாயங்களும் அடங்குவர். இந்த ஆதாரங்கள் இவர்களுக்கு போதுமானது. அதாவது, எந்த இடத்திலும் எந்த காலத்திலும் ஒவ்வொரு சமுதாயத்திலும் எப்போது நபி வந்தாலும் அந்த மக்களேதான் மறுத்துள்ளனர்.

அன்னார் கூறினார்கள்: நாம் இந்த எதிரிகளிடமிருந்து எதனைக் கேட்க வேண்டியது ஏற்பட்டதோ அது இந்த சுன்னத்திற்கேற்பவே ஆகும். இன்னும் சொல்வதாயின், ஒரு நபிக்கு அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லது அன்னாரது உண்மைக்கு ஓர் ஆதாரமாகும். ஏனெனில் நபிமார்களுக்காக உள்ள சுன்னத் இப்படித்தான் நடக்கிறது. அன்னார் கூறுகிறார்கள்: மா யஃதிஹிம் மின் ரஸூலின் இல்லா கானு பிஹி யஸ்தஹ்ஸிவூன் – அவர்களால் ஏளனம் செய்யப்படாத எந்த ரஸூலும் அவர்களிடம் வரவில்லை.

அன்னார் எதிரிகளை விளித்துக் கூறுகின்றார்கள்: அந்தோ! இவர்கள் தூய எண்ணத்துடன் என்னிடம் வந்திருக்க வேண்டுமே! நான் அவர்களுக்கு இறைவன் எனக்குத் தந்த அந்த இறைவனை அவர்களுக்கு காட்டியிருப்பேன். அந்த இறைவன் தானும் அவர்களுக்கு உதவி செய்திருப்பான்; புரிய வைத்திருப்பான். அவர்களோ கருமித்தனம் மற்றும் பொறாமையைப் பயன்படுத்து கிறார்கள். பிறகு நான் அவர்களுக்கு எவ்வாறு புரிய வைப்பேன்? ஆனால், நாம் ஏற்றுக் கொண்டிருப் பவர்கள் ஆவோம். நமது பணி என்னவென்றால், அவர்கள் வந்தபோது ஏற்றுக் கொண்டு விட்டோம். பிறகு, இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்துங்கள். உலகியலில் விழ வேண்டாம். இவ்வுலகம் தற்காலிக மானது. நாம் மறுவுலகைக் குறித்தே கவலைப்பட வேண்டும்.

அவர்கள் கூறுகிறார்கள்: மனிதன் உண்மையான உள்ளத்துடன் உண்மையைத் தேடுவதற்காக வந்தால் எல்லாம் முடிவாகி இருக்கும். ஆனால் தீய பேச்சும், விஷமமுமே அவரது நோக்கமாக இருந்தால் எதுவும் நடக்காது.

அவர்கள் கூறுகிறார்கள்: ஹுஜ்ஜுல் கராமா –வில் இப்னு அரபியின் கூற்றை சான்று காட்டி எழுதுகிறார்கள். மஸீஹ் மவ்வூது வரும்போது அவர் இட்டுக்கட்டுபவராகவும் அறிவீனராகவும் கருதப்படுவார். எந்த அளவுக்கு எனில் இவர் எமது மார்க்கத்தை மாற்றி விட்டார் என்று கூறுவர். இப்போது அதுவே நடக்கிறது. அத்தகைய அவதூறு என்மீது செய்யப்படுகின்றது. அவர் இந்த ஐயப்பாடுகளிலிருந்து எப்போது ஈடேற்றம் பெற முடியும் என்றால் அவர் தனது விளக்கங்களை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு வாதிக்கின்ற இவர் உண்மையாளரா? இல்லையா? என்பது குறித்து சிந்திக்கட்டும். இதற்காக அவர் கவலைப்படட்டும். அல்லாஹ்விடம் இது உண்மையா? இல்லையா? என்று துஆ கேளுங்கள். சில விவகாரங்கள் நிச்சயமாக புரிவதற்கு அப்பாற்பட்டவையாக உள்ளன. ஆனால் எவர்கள் தூதர்களிடம் ஈமான் கொள்கிறார்களோ நல்லெண்ணம், பொறுமை, உறுதிப்பாடு ஆகியவற்றுடன் எதிர்பார்த்திருக்கிறாரோ அவருக்கு அல்லாஹ் உண்மையான நிலையை திறந்து தருகின்றான் என்று கூறுகின்றார்கள்.

கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காலத்தில் சஹாபாக்கள் கேள்வி கேட்டதில்லை. மாறாக எவராவது வந்து கேள்வி கேட்கட்டும் என்று எதிர்பார்த்திருந்தனர். அப்போது அதிலிருந்து பயனடைந்தனர். அதுவல்லாமல் தலைகுனிந்தவாறு தாம் அமைதியாக அமர்ந்திருப்பர். கேள்வி கேட்கும் துணிச்சல் கொண்டதில்லை.

கூறுகிறார்கள்: ஏற்றுக் கொள்பவர் மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க வழிமுறை என்னைப் பொருத்தவரை இதுதான். அதாவது அவர் மரியாதையைப் பேண வேண்டும். எவர் நபிக்கு அதப் (மரியாதை) காட்டுவதை புரியவில்லையோ அதனைக் கடைபிடிக்கவில்லையோ அவர் அழிக்கப்பட்டு விடக் கூடாதே என்ற அச்சம் இருந்தது. (மல்.ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 73-75; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அன்னார் தமது தரப்பில் அறிவுரையைக் கூறி விட்டார்கள். தவறான எண்ணம் கொள்ளக் கூடாது. தேவையில்லாத கேள்வி கேட்கக் கூடாது. முதல் விஷயம், நான் ஏற்கனவே கூறியதுபோன்று நாம் எந்தத் தாழ்வு மனப்பான்மையும் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. சில விஷயங்களில் பழைய பெரியவர்கள், அவ்லியாவுடைய கருத்துக்கள் அல்லது தமது கருத்தை எடுத்து வைத்தல் அல்லது தமது தீர்ப்பை வழங்குதல் ஆகியவை இந்த ஹகம் அதலின் நீதி நெறி தீர்ப்பவரின் கட்டளையின் முன் எந்த முக்கியத்துவமும் பெறுவதில்லை. அந்தப் பெரியவர்கள் தமது காலத்தில் இஸ்லாத்திற்காக வேலை செய்தார்கள். அதிகமாக வேலை செய்தார்கள். உம்மத்தை தத்தமது வட்டத்தில் பராமரிக்க முயன்றுள்ளனர். ஆனால், இப்போது காத்தமுல் குலஃபா, காத்தமுல் அவ்லியா இறுதிக் காலத்தின் சீர்திருத்தவாதி, நீதி நெறி தீர்ப்பவர் வந்து விட்டார். பிறகு அவரது தீர்ப்பும் அவரது அறிவும் அவர் இஸ்லாம் பற்றிக் கூறியதே உண்மையாகும். பிற அனைத்தும் தவறாகும். நாம் பைஅத்திற்குப் பிறகு இதனை செயல்படுத்த வேண்டும். நாம் இதனை நினைவில் கொள்ள வேண்டும். இதுவே உண்மையான இஸ்லாம் ஆகும். இதனை இப்போது உலகம் ஏற்றுக் கொள்கிறது என்று கூறினேன். காரணம் இதுவேயாகும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கற்பித்த இஸ்லாத்தின் அசல் போதனையை எடுத்து வைத்துள்ளோம்.

நான் சில உதாரணங்களையும் எடுத்து வைத்துள்ளேன். நிறைய உதாரணங்கள் உள்ளன. நான் ஏற்கனவே கூறியதுபோன்று இரண்டாவது விஷயமாக இதனை நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விட்டுச் சென்ற படைப்புகள், நூல்களைப் படிப்பதும் அதனை அறிவதும்தான் நமக்கு இஸ்லாம் பற்றி கூறுகிறது. ஆகவே, நாமும் படித்து மற்றவருக்கும் கொடுக்க வேண்டும். எவருக்கு அழகிய தொடர்பு இருக்கிறதோ, எவர் நல்லியல்பு கொண்டவரோ அவருக்கு படைப்புகளைத் தருவது அவசியமாகும். அன்றாட விவகாரங்கள் மற்றும் பிரச்சனைகளில் இதில் இருந்தே நாம் சான்றுகளை வழங்க வேண்டும். இது அவசியமாகும். ஒவ்வோர் அஹ்மதியும் அன்னாரின் நூல்களிலிருந்து தாமும் பயனடைய வேண்டும். அதனைப் பரப்பவும் வேண்டும். பிறகு உலகம் என்ன கூறும்? முஸ்லிம் அல்லாத மக்களிடம் என்ன எண்ணங்கள் உருவாகும்? என்பதை பொருட்படுத்தக் கூடாது. நபிமார்கள் மற்றும் அல்லாஹ்வின் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்கள் வருவதே உலகியல் சிந்தனை அதிகமாகவும், மார்க்கத்தில் தடம் புரளுதலும் உருவாகும் காலத்தில்தான் பெரும்பாலார் உலகியலில் வீழ்ந்து மார்க்கத்தை மறந்து விட்டிருப்பர். அவர்களை சரியான வழியில் கொண்டு வருவதே வரக்கூடியவரின் பணியாகும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு உலகின் சீர்திருத்தத்தின் பொறுப்பை ஏற்றுள்ளோம். எனவே எதிர்ப்பும் ஏற்படும். உலகவாதிகள் தமது உலகியல் பயன் மற்றும் ரசனைக்காக சட்டங்களை இயற்றுகிறார்கள். அந்த சட்டம் இறைவனது கட்டளைக்கு எதிராக இருப்பின் நாம் சட்டத்தின் வட்டத்திலிருந்து கொண்டே உலகை சீர்திருத்த வேண்டும். அவர்களுக்கு சரியான வழியைக் காட்ட வேண்டும். எந்த வகையான தாழ்வு மனப்பான்மைக்கும் பயத்திற்கும் அவசியமில்லை. இப்பணியை நாம் ஞானத்துடன் செய்ய வேண்டும்.

ஆகவே, நாம் அச்சமடையத் தேவையில்லை. எதனை தவறு என மார்க்கம் கூறியுள்ளதோ அதனை தவறு என்று வெளிப்படையாக நாம் கூற வேண்டும். இதனை ஒவ்வோர் அஹ்மதியும் தனது மனதில் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதிகமாக கேள்வி கேட்பதை தமது காலத்து மக்களிடம் ஒரு நபியின் உதாரணத்தைக் கூறியிருந்தார்கள். அதிகம் கேள்வி கேட்கக் கூடாது. அதனால் முழுமையான கட்டுப்படுதல் வெளிப்படாது. எனவே கூறினார்கள்: பிறர் வந்து கேள்வி கேட்பார்கள். அதற்குப் பதில் கூறும்போது ஈமான் கொண்டவர்களுக்கு பதில் கிடைக்கிறது. நபியின் உய்த்துணரும் தன்மையால் வந்தவரின் மனதில் கேள்விகளை உணர்ந்து கொண்டு பதில் கூறி விடுகிறார்கள். பின்னால் வரக்கூடியவர்கள் அவர்களின் தாழ்மையான அடியார்களின் சொற்பொழிவைக் கேட்டு எங்கள் மனதிலிருந்த கேள்விகளுக்கும் கூட பதில் வந்து கூறி விட்டீர்கள் என்று கூறுகிறார்கள் என்றால் பிறகு நபிமார்களின் இந்த புரிதல் இன்னும் மிக அதிகமாக உள்ளது. எனவே பதில் தரும்போது மிக நுட்பமான

முறையில் பதில் கூறி விடுகின்றனர். எனவே பதில் ஏதுமில்லை என்று கருதி விடக் கூடாது. பதில் இருக்கிறது. ஆனால் ஏற்றுக் கொண்டவர்களின் பணி தமது கட்டுப்படுதலின் தரத்தை உயர்த்த வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் முழுமையாக கட்டுப்பட்டார்கள். அதனையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ருஹானி கஸாயின் தொகுதி 5 பக்கம் 586) அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது சபைகளில் அமர்ந்திருப்பார்கள்.

அதே அறிவிப்பில் வருகிறது. தலைகுனிந்து அமர்ந்திருப்பார்கள். சுயமே ஒருபோதும் பேசவு–மாட்டார்கள்; கேள்வியும் கேட்டதில்லை. (அல் ∴பஸ்ல் 27 மார்ச் 1957 தொகுதி 48/11 பக்கம் 5 எண்.74) கேள்வி கேட்பவர் வந்தால் அதிலிருந்து பயன் பெறுவர். குறித்துக் கொள்வர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது சபைகளில் வழிகாட்டல்களை ஆழ்ந்து கேட்பார்கள்; பயனடைவார்கள். நினைவில் கொள்ளுங்கள். நான் ஏற்கனவே கூறினேன். இஸ்லாமிய மார்க்கத்தில் சில கேள்விகளுக்கு பதில் இல்லை என்பது இல்லை. மாறாக ஒவ்வொரு விஷயத்திற்கும் பதில் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது நூல்கள் மற்றும் வழிகாட்டல்களில் எல்லா வகையான கேள்விகளுக்கும் பதில் வழங்கியுள்ளார்கள். எனவே, அவர்களின் நூல்களை வாசிக்க வேண்டும் என்று நான் கூறியிருந்தேன். இஸ்லாத்தின் மேன்மையை நிரூபிக்க அன்னாரின் நூல்களைப் படிப்பது மிகவும் அவசியமாகும். ஃபிக்ஹா விவகாரங்கள், அன்றாட விவகாரங்களுடன் தொடர்புடையவை அல்லது அறிவு சார்ந்த விபரங்கள் இவை அனைத்தும் நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது நூல்களில் நமக்கு கிடைக்கின்றது. கலீஃபாக்கள் அதனை மேலும் விளக்கியுள்ளார்கள். இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதனைப் படிக்க வேண்டும். சிந்திக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் தமது ஜமாஅத்திற்கு அவர்கள் எப்படி இருக்க வேண்டும்; அவர்களது ஈமான் எப்படி இருக்க வேண்டும்? என்று போதனை செய்துள்ளார்கள். இது சம்பந்தமாக நான் உங்களுக்கு பல மேற்கோள்களை எடுத்து வைக்கிறேன் அதன் மூலம் நம்மில் ஒவ்வொருவரும் பைஅத்தின் கடமையை நிறைவேற்றுபவர்களாக ஆக வேண்டும்.

அன்னார் தமது ஜமாஅத்திற்கு பெரும் போதனை செய்தவாறு கூறுகின்றார்கள்: இக்காலம் மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கிறது. எந்த விதமான இணை வைப்பும் பித்அத்தும் பல கெடுதல்களும் உருவாகிக் கொண்டிருக்கின்றன. பைஅத்தின் போது தரப்பட்ட உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவேன் என்ற வாக்குறுதி இறைவன் முன்னால் தரப்பட்ட வாக்குறுதியாகும். இது சிந்திக்க வேண்டிய விஷயமாகும். இது இறைவனுக்கு முன்னால் தரப்பட்ட வாக்குறுதியாகும். இதில் மரணம் வரை உறுதியான நிலைத்து நிற்க வேண்டும். அதுவல்லாமல் அவர் பைஅத் செய்யவில்லை. அதில் நிலைத்து நின்றீர்கள் என்றால் மார்க்கத்திலும் உலகத்திலும் பரக்கத் வழங்குவான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப முழுமையான தக்வாவை மேற்கொள்ளுங்கள். காலம் மிகவும் அபாயகரமானதாகும். இறைவனின் பிடி வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. எவர் இறைவனது விருப்பத்திற்கேற்ப தம்மை ஆக்கிக் கொள்வாரோ, அவர் தமது உயிர், குடும்பம் தனது சந்ததிகள் மீது கருணை காட்டுபவராவார். இக்கால நிலை தடம் மாறி உள்ளது. இதனை சிந்தித்தவாறு அல்லாஹ்வின் பக்கம் அதிகம் திரும்ப வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள். மனிதன் ரொட்டி உண்கிறான். வயிறார உணவு உண்ணாத வரை பசி அடங்காது. ஒரு சிறிய துண்டு ரொட்டி உண்பதால் பசியிலிருந்து விடுதலை பெறுவாரா? ஒருபோதும் இல்லை. ஒருவர் சில துளி தண்ணீரை தொண்டையில் விடுவதால் அத்துளி அவரது தாகத்தை ஒருபோதும் தணிக்காது. அந்த துளிக்குப் பிறகும் அவர் மரணிப்பார்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உயிரைப் பாதுகாப்பதற்காக உயிர் வாழத் தேவையான அளவுக்கு அவர் உண்ணாதவரை பருகாதவரை அவரால் தப்பிக் முடியாது. எவ்வாறிருப்பினும் போதுமான அளவு உண்பது அவசியமாகும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இதுவே மனிதனின் மார்க்க நிலையும் ஆகும். எதுவரை மனிதனது மார்க்கம் போதுமான அளவுக்கு இல்லையோ அவர் தப்பிக்க இயலாது. மார்க்கம், தக்வா, இறை கட்டளைக்குக் கட்டுப்படுதல் ஆகியவை எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்றால் எவ்வாறு ரொட்டியும் தண்ணீரும் பசியும் தாகமும் தீரும் அளவுக்கு இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு இருக்க வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். இறைவனது சில காரியங்களை ஒப்புக் கொள்ளாமல் இருப்பது இவை அனைத்தையும் விடுவது போன்றதாகும். ஒரு பங்கை ஷைத்தானுக்கும் ஒரு பங்கை அல்லாஹ்வுக்கும் என்றால் அல்லாஹ் பங்கு வைத்து தருவதை விரும்புவதில்லை. இணை வைப்பதை இறைவன் விரும்புவதில்லை. இந்த இயக்கத்திற்கு காரணம், அவர் அல்லாஹ்வின் பக்கம் வர வேண்டும். மனிதன் இறைவன் பக்கம் வர வேண்டும் என்பதாகவேயாகும். இறைவன் பக்கம் வருவது மிகவும் சிரமமான காரியமாக இருப்பினும், அது ஒருவகை மரணமாயினும் இறுதியில் வாழ்வும் அதில்தான் உள்ளது. எவர் தமக்குள் இருந்து ஷைத்தானிய பங்கை எறிந்து விடுவாரோ அவர் அருளுக்குரிய மனிதராக இருக்கிறார். அவரது வீடு, நகரம், அவரைச் சார்ந்தோர் அனைத்திலும் அவரது பரக்கத் சென்று சேர்கிறது. ஆனால் இந்தப் பங்கிலிருந்து குறைவாக வந்தால் பரக்கத் இருக்காது. பைஅத்தினை ஏற்றுக் கொள்ளல் செயலளவில் இல்லாத வரை பைஅத் ஒரு பொருட்டே அல்ல. மனிதனின் முன் நீங்கள் நிறைய விஷயங்களைப் பேசுங்கள். ஆனால் செயலளவில் எதுவும் செய்யவில்லை என்றால் அதனால் அவர் மகிழ்ச்சி அடையவே மாட்டார். அதேபோன்றே இறைவனது விவகாரமும் ஆகும். அவன் தன்மானமுள்ளவன் அனைவரிலும் அதிக தன்மானமுள்ளவனாவான். அவனுக்கும் கட்டுப்பட்டு விட்டு மறுபுறம் அவனது எதிரிகளுக்கும் கட்டுப்படுவது என்று இருக்க முடியுமா? அதன் பெயர் நயவஞ்சகம் ஆகும். மனிதன் இந்த விஷயத்தில் ஸைத், பக்கரை பொருட்படுத்தக் கூடாது. இறுதி மூச்சு உள்ளவரை அதில் நிலைத்து நிற்க வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தீமைகள் இரு வகைப்படும். இறைவனுக்கு இணை வைப்பது; இறைவனது மகத்துவத்தை அறியாதிருப்பது; அவனுக்கு இபாதத் மற்றும் கட்டுப்படுதல் செய்வதில் சோம்பேறித்தனம் காட்டுவதாகும். இரண்டாவது, அவனது அடியார் மீது பரிவு காட்டாமல் இருத்தல், அவர்களின் உரிமைகளை வழங்காதிருத்தல் ஆகும். எனவே, இரு வகையான கெடுதல்களையும் செய்யாதீர்கள். நீங்களும் கட்டுப்படுதலில் நிலைத்திருங்கள். நீங்கள் பைஅத்தில் செய்த உடன்படிக்கையில் நிலைத்து நில்லுங்கள். இறைவனது அடியார்களுக்கு துன்பம் தராதீர்கள். திருக்குர்ஆனை சிந்தித்துப் படியுங்கள். திருக்குர்ஆனை மிகவும் சிந்தித்துப் படியுங்கள். பிறகு அதன்படி செயல்படுங்கள். ஒவ்வோர் எள்ளி நகையாடலும் வீணானதும் இணை வைத்தலுமான சபைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். ஐவேளை தொழுகைகளை நிலைநாட்டுங்கள். எந்த இறை கட்டளையையும் கிடப்பில் போடாதீர்கள். உடல் சுத்தமாக வையுங்கள். உள்ளத்தை எல்லா வகையான காழ்ப்புணர்ச்சி, பொறாமைகளிலிருந்து தூய்மைப்–படுத்துங்கள். இவ்விஷயங்களையே இறைவன் உங்களிடம் விரும்புகின்றான். (மல்∴பூஸாத் தொகுதி 5 பக்கம் 75-76) இதனை ஒவ்வொருவரும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு நம்மை நாமே வீணான சபைகளிலிருந்து விடுவித்துள்ளோம் என்று பார்க்க வேண்டும். நாங்கள் இறைவன் மீது நிச்சய உறுதி கொண்டுள்ளோம் என்று அநேகர் கூறுவர். நாங்கள் இணை வைக்கும் சபைகளில் அமர்வதில்லை என்பர். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். ஏதாவது சபைகள் அல்லது இன்டர்நெட் அல்லது டி.வி அல்லது ஏதாவது ஒரு பணி உங்களின் தொழுகைகளிலிருந்து உங்களை கவனமற்றவராக்கும் எனில் அது இணைவைக்கும் சபையேயாகும்.

ஆகவே, நாம் இத்தனை ஆழமாகச் சென்று ஆய்வு செய்யும் தேவையுள்ளது. அன்னார் குறிப்பாக கவனமூட்டினார்கள். ஐவேளை தொழுகைகளை நிலைநாட்டுங்கள். தொழுகைகளை நிலைநாட்டுவது என்பது ஐவேளை தொழுகையை நிறைவேற்றுவ–தாகும். குறிப்பிட்ட நேரத்தில் தொழுவதாகும். நான் இதனை ஆய்வு செய்தேன். அதிகமான பலவீனம் தெரிய வருகிறது. இங்கும் கூட என்னிடம் மக்கள் துஆவுக்காக கூறும்போது, நீங்களும் துஆ செய்கிறீர்களா? தொழுகிறீர்களா? முறைப்படி தொழுகிறீர்களா? என்று கேட்கும்போது பதில் எதிர்மறையாக வருகிறது அல்லது முயற்சி செய்கிறோம் என்று கூறுகின்றனர். ஆக துஆவுக்காக கூறுபவர் தமக்குள் தமது கஷ்டத்தை அகற்றுவதற்காக துஆ செய்வதற்கான வேதனை உருவாகா விட்டால் அவருக்காக துஆ செய்வதற்கு மற்றவருக்கு எப்படி வேதனை ஏற்படும்? ஆயினும், நீங்கள் துஆக்கான உரிமையை நிறைவேற்றும்போது–தான் பிறரது துஆவும் உங்களுக்கு உதவி செய்யும். இதனையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுஸ் ஸலாத்தி பாபு ∴பஸ்லுஸ்ஸ"ஜுதி வல் ஹஸ் அலைஹி ஹதீஸ் 1094) அதேபோன்று சமூகத் தீமைகள் பற்றி நான் சுருக்கமாகக் கூறினேன். தமக்குள் அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றின் எந்த தரம் இருக்க வேண்டுமோ அந்த தரம் இல்லை. இன்னும் சொல்வதாயின், பொறாமையும், காழ்ப்புணர்ச்சியும் காணப்படுகிறது. எனவே ஒவ்வொருவரும் தமது உள்ளத்தின் ஆழத்தைப் பார்க்க வேண்டும். அவர் எப்படிப்பட்டவர் என்று மற்றவரைப் பார்க்காதீர்கள். உங்களை நீங்களே பாருங்கள். உங்களை சீர்திருத்துங்கள். தம்மை சீர்திருத்திக் கொண்டால் எஞ்சிய தீமைகளும் விலகி விடும். நான் எல்லா வகையிலும் தூய்மையானவன் என்று எவரும் வாதிக்க முடியாது. எனவே எப்போதும் தமது தவறுகளுக்காக பாவமன்னிப்புக் கோர வேண்டும்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான வாய்ப்பினை வழங்குவானாக! நாம் உண்மையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது பைஅத்தில் வந்ததன் உரிமையை நிறைவேற்று–பவர்களாகவோமாக!

★ ★ ★ ★ ★

**கனடா பாராளுமன்றத்தில் ஹுஸூர் அவர்களின் வருகை. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை முழுமையான மரியாதையுடனும் கண்ணியத்துடனும் வரவேற்றனர்.**

**ஜமாஅத் உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காகவும், மனித நேயத்தை நிலைநாட்டுவதற்காகவும் செய்யும் முயற்சிகள் மதிக்கத்தக்கவையாகும். மேலும், சமுதாயத்தின் நன்மையான பணிகளுக்காக உங்களது பங்களிப்பு மிகவும் மகத்தானதாகும். (அரசாங்கத்தின் Cheif WHIP ஆக இருக்கும் பாராளுமன்ற உறுப்பினரான என்ட்ரியோல்ஸ்லி அவர்கள் கூறிய கருத்து)**

*18 அக்டோபர் 2016 -ல் ஸய்யிதுனா ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கனடாவின் பாராளுமன்றமான Parliament Hill -ற்கு வருகை தந்தார்கள். ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு மிகவும் மகிமையுடன் பாராளுமன்றத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் பல்வேறு உறுப்பினர்களும் அமைச்சர்களும் ஹுஸூர் அவர்களைச் சந்தித்தனர். ஹுஸூர் அவர்கள் பாராளுமன்றத்தில் உலகின் நிலைமைகள் மற்றும் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக ஆன்மாவிற்கு எழுச்சியூட்டக்கூடிய சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவை அறிஞர்களும் அரசியல்வாதிகளும் வாழ்க்கையின் பல்வேறு துறைகளுடன் தொடர்புள்ளவர்களும் மிகவும் விரும்பினர். மேலும் அவர்களுக்கு ஏற்பட்ட சிறந்த தாக்கங்களை வெளிப்படுத்தினர். இந்த நாளில் ஹுஸூர் அவர்களின் அன்றாட அலுவல்கள் ஈமானுக்கு மிகவும் எழுச்சியூட்டக்கூடியவையாக இருந்தன. இதுபற்றிய முழு விபரங்களை வாசகர்களுக்காக இனி வரும் சில இதழ்களில் பல பகுதியாக வெளியிடுகின்றோம். (ஆசிரியர்)*

**(முதல் பகுதி)**

இறை ஜமாஅத்துகளின் வரலாற்றில் சில நாட்கள் தமது தனிச்சிறப்பின் காரணமாக வழக்கத்திற்கு மாற்றமாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன. அவை வரவிருக்கின்ற புரட்சிகளுக்கான மைல் கல்லாக அமைகின்றன. வெற்றிகளால் நிறைந்து காணப்படும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் இதற்கு முன்னரும் கூட இத்தகைய நாட்கள் வந்தன. அவை அஹ்மதிய்யத்தின் வானத்தில் ஒளிமயமான அடையாளங்களைப் போன்று பிரகாசித்தன. இன்றும் கூட இதுபோன்ற இன்னொரு நாள் வந்தது. வருங்காலத்தில் கனடா மண்ணில் ஏற்படவிருக்கின்ற மகத்தான புரட்சிகள் மற்றும் வெற்றிகளுக்கான முன்னோடியாக அந்த நாள் இருப்பது நிரூபிக்கப்படும். அது ஜமாஅத்திற்காக வெற்றிகளுக்கான புதிய வாசல்களைத் திறக்கும் - இன்ஷா அல்லாஹ்.

இன்று ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களைக் கண்ணியப்படுத்தும் வகையில் மிகவும் முக்கியமான ஒரு நிகழ்ச்சிக்கான ஏற்பாடு Canadian Parliament Hill -ன் Sir John Macdonald Hall -ல் செய்யப்பட்டிருந்தது.

கனடாவிலுள்ள Parliament Hill -ன் கட்டுமானப் பணி 1859 முதல் 1866 வரையுள்ள இடைப்பட்ட காலத்தில் முழுமையடைந்தது. 3 பிப்ரவரி 1916 -ல் கனடாவின் பாராளுமன்ற கட்டிடத்திலுள்ள Common Reading Room -ல் நெருப்பு பற்றியது. அது ஏறக்குறைய முழு கட்டடத்தையும் எரித்து மண்ணாக்கி விட்டது. நூலகம் மற்றும் கட்டடத்தின் North West Wing மட்டுமே பாதுகாப்பாக இருந்தது. 1922 -ல் பாராளுமன்ற கட்டடத்தின் இரண்டாவது கட்டுமானப் பணி முழுமையடைந்தது. மேலும் 92.2 மீட்டர் உயரத்தில் ஒரு டவரும் கூட கட்டப்பட்டது. அந்தப் பணி 1927 -ல் முழுமை அடைந்தது. கனடாவின் இந்த பாராளுமன்ற கட்டடம் Parliament Hill என்று அழைக்கப்படுகின்றது. இன்று இதே Parliament Hill -ல் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அரசாங்கத்தில் மேல்மட்டத்திலுள்ள ஆட்சியாளர்களுடன் பல்வேறு கூட்டங்களை நடத்துவதற்கும் தனது வரலாற்றுச் சிறப்புமிக்க சொற்பொழிவை நிகழ்த்துவதற்கும் சென்று கொண்டிருந்தார்கள். காலை 10.00 மணி 15 நிமிடத்திற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தமது தங்குமிடத்திலிருந்து வெளியே வந்தார்கள். Parliament Hill -ஐ நோக்கி அவர்களது பயணம் ஆரம்பமானது. 10 மணி 50 நிமிடத்திற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பாராளுமன்றத்திற்கு வருகை தந்தார்கள். பாராளுமன்றத்தின் எந்தவொரு கட்டடத்திற்கு செல்வதாக இருந்தாலும் அல்லது எந்தவொரு பகுதிக்குச் செல்வதற்கும் மீண்டும் மீண்டும் பாதுகாவலர்களின் கடுமையான பரிசோதனையைக் கடந்து செல்ல வேண்டியது வரும். ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும்போதும் பாதுகாப்பு அதிகாரிகள் செக்கிங்கிற்காக அங்கு நின்று கொண்டிருப்பார்கள். ஹுஸூர் அவர்கள் எவ்வித பரிசோதனையும் இல்லாமல் உள்ளே செல்வதற்கு பாதுகாப்புத்துறை ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது. ஹுஸூர் அவர்களுக்கு பாதுகாப்புத்துறை மேற்கொள்ளும் பரிசோதனையிலிருந்து விதிவிலக்கு வழங்கப்பட்டிருந்தது. Parliament Hill -ஐ அடைந்த பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் கார் பாரளுமன்றக் கட்டடத்தின் பிரதான நுழைவாயிலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் காரிலிருந்து வெளியே வந்ததும் கீழ்க்காணும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை முழுமையான கண்ணியத்துடனும் மரியாதையுடனும் வரவேற்றனர். பாராளுமன்ற உறுப்பினரான Judy Sgro அவர்கள், பாராளுமன்ற உறுப்பினரான Kamal Khera அவர்கள், பாராளுமன்ற உறுப்பினரான Ramesh Sangana அவர்கள், பாராளுமன்ற உறுப்பினரான Deborah Schulte அவர்கள், ஜமாஅத் சகோகதரர்கள், ஆண்கள், பெண்கள் ஆகியோர் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் வருகைக்கு முன்னதாகவே பாராளுமன்றத்திற்கு வெளியே நின்று கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரும் ஹுஸூர் அவர்கள் வந்ததும் மிகவும் உணர்வுடன் தக்பீர் முழக்கங்களை எழுப்பினர். இவர்களில் ஒவ்வொருவரும் ஈமானிய உணர்வால் நிரம்பி இருந்தனர். இன்று கனடா மண்ணிலும் கூட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்திருக்கும் இந்த முன்னறிவிப்பு மிகவும் மகிமையுடன் நிறைவேறியிருப்பதை எண்ணி அவர்களது உள்ளம் இறைவன் முன்னிலையில் சஜ்தாவில் வீழ்ந்திருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறியிருந்தார்கள். (ஒவ்வோரு சமுதாயமும் இந்த நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்தும். இந்த இயக்கம் வலுவாக வளர்ச்சியடையும்; மலரும். எதுவரை என்றால் பூமி முழுவதும் பரவி விடும். கேட்பவர்களே! இந்த விஷயங்களை நினைவில் கொள்ளுங்கள். இந்த முன்னறிவிப்புகளை உங்களது பெட்டிகளில் பாதுகாப்பாக வையுங்கள். அதாவது இவை இறைவனின் வார்த்தைகளாகும். ஒரு நாள் அவை நிறைவேறும்.)

இன்று அந்த நாளும் வந்தது. கனடா சமுதாயம் இந்த நீரூற்றிலிருந்து நீர் அருந்திக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் பாராளுமன்றத்திற்குள் சென்றார்கள். பாராளுமன்ற உறுப்பினரான Judy Sugro அவர்கள் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு பாராளுமன்றத்தின் சில பகுதிகளைக் காட்டினார்கள். அங்கிருந்த நூலகத்திற்கும் ஹுஸூர் அவர்கள் சென்றார்கள். இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் பாராளுமன்றத்தின் ஆறாவது மாடியிலுள்ள Spousal Lounge -ற்குச் சென்றார்கள். ஹுஸூர் அவர்களை வரவேற்ற நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஹுஸூர் அவர்களுடன் இருந்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினரான Judy Sugro அவர்கள் ஹுஸூர் அவர்களிடம் நிகழ்ச்சிகளைப் பற்றிய விபரங்களைத் தெரிவித்தவாறு இங்கு இந்த Lounge -ல் சில அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் பாராளுமன்றத்தின் மேல் சபையின் அங்கத்தினர்களும் ஹுஸூர் அவர்களைச் சந்திப்பார்கள். அவர்களுடன் கூட்டங்கள் நடைபெறும் என்று தெரிவித்தார்

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 25 May 2017 Issue No. 21

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

*-கள். அதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் கீழேயுள்ள ஒரு ஹாலிற்குச் செல்வார்கள் என்றும் அங்கு சிற்றுண்டிக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் அப்போது ஹுஸூர் அவர்களைச் சந்திப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார். தொழுகைகளை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடும் இதே ஹாலின் ஒரு பகுதியில் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். மேலும் அவர்கள் மதிய உணவிற்கான இடைவேளைக்குப் பிறகு மேலும் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் ஹுஸூர் அவர்களைச் சந்திப்பார்கள் என்றும் பிரதமர் அவர்களும் ஹுஸூர் அவர்களைச் சந்திப்பார்கள் என்றும் பாராளுமன்ற கூட்டம் நடைபெறும் நேரத்தில் ஹுஸூர் அவர்கள் Visit Gallery -ற்குச் செல்வார்கள் என்றும் அங்கு Speaker (மக்கள் சபைத் தலைவர்) மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹுஸூர் அவர்களை வரவேற்பார்கள் என்றும் அதற்குப் பிறகு மாலையில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள் என்றும் தெரிவித்தார்.*

*நிகழ்ச்சிற்கேற்ப காலை 11.00 மணியிலிருந்து சந்திப்புகளின் இந்த நிகழ்ச்சி ஆரம்பமானது. முதலாவதாக, பாராளுமன்ற உறுப்பினரான மாண்புமிகு ஏன்ட்ரியூல்ஸிலி அவர்கள் (Cheif Government WHIP) ஹுஸூர் அவர்களைச் சந்திப்பதற்காக வந்தார். அவர்கள் தாம் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றிருப்பதாகவும் இப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதாகவும் Cheif WHIP ஆக இருப்பதாகவும் கூறினார். நான் இருக்கும் பகுதி ஒட்டோவாவில்தான் இருக்கின்றது. நான் இங்கிருந்துதான் பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றேன்.*

*ஒட்டோவாவிலும் உங்களது ஜமாஅத் இருக்கின்றது. இந்த முறை டொரோன்டோவில் முதன் முறையாக உங்களது ஆண்டு மாநாட்டில் நான் கலந்து கொண்டேன். எனக்கு இது வியப்பூட்டக்கூடிய ஓர் அனுபவமாக இருந்தது. மாநாடு மிகச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு நல்ல ஏற்பாடுகளுடன் நடைபெற்றது. மாநாட்டுத் திடலுக்கு வெளியே எங்கு போலீஸின் கட்டுப்பாட்டில் பார்க்கிங் இருந்ததோ அங்கு நல்ல முறையில் ஏற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்படவில்லை என்று அவர் கூறினார். அதற்கு ஹுஸூர் அவர்கள் எங்களிடம் காணப்படும் ஒழுங்குமுறை இராணுவத்திலுள்ள ஒழுங்குமுறையை விட சிறந்தது என்று கூறினார்கள்.*

*பாராளுமன்ற உறுப்பினர், ஜமாஅத் உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கும் மனித நேயத்தை நிலைநாட்டுவதற்கும் என்ன முயற்சிகளைச் செய்து வருகின்றதோ அவை மதிக்கத்தக்கவையாகும். மேலும் நீங்கள் சமுதாயத்திற்கு நன்மையைத் தரக்கூடிய பணிகளில் உங்களது பங்களிப்பு மிகவும் மகத்துவம் வாய்ந்ததாகும். மேலும் நான் இன்று ஹுஸூர் அவர்களைச் சந்திப்பது எனக்கு கண்ணியத்தை தரக்கூடியதாகும் என்று கூறினார்.*

*பாராளுமன்ற உறுப்பினரான Judy Sugro அவர்களும் அந்த சந்திப்பின்போது அங்கு இருந்தார்கள். ஹுஸூர் அவர்கள் Judy அவர்களுக்கு ஜமாஅத்துடன் மிகவும் பழைய தொடர்பு இருக்கின்றது. இப்போது இவர்கள் நமது நெருங்கிய நண்பராக ஆகி விட்டார்கள். நான் முதன் முதலாக கனடா வந்த நேரத்தில் என்னை வரவேற்பவர் -களில் இவர்களும் ஒருவராக இருந்தார்கள் என்று கூறினார்கள்.*

*பாராளுமன்ற உறுப்பினரான Judy அவர்கள் ஹுஸூர் அவர்களை Siscatown -லும் கூட சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருக்கிறார்கள். ஹுஸூர் அவர்கள் Berminton -லும் சுற்றுப் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்பது எனது விருப்பமாகும். ஹுஸூர் அவர்கள் அங்கும் வர வேண்டும் என்று கூறினார்கள். அப்போது கனடாவின் அமீர் சாஹிப் அவர்கள் Berminton -ற்கு முன்னமாக Siscatown -ல் நடைபெறும். கட்டுமானப் பணி நிறைவடையும் என்று கூறினார்கள். இதைக் கேட்ட Judy அவர்கள் அப்படியென்றால் ஹுஸூர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் கனடாவிற்கு வர வேண்டியது வரும் என்றே அதற்குப் பொருள் என்று கூறினார்கள்.*

*மேலும் அவர்கள், ஹுஸூர் அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: இன்று நான் பாராளுமன்றத்திற்கு வெளியே ஒரு பெண்ணைப் பார்த்தேன். அவர்கள் நான்கு மாதத்திற்கு முன்னர்தான் கனடா வந்துள்ளார்கள். இன்று ஹுஸூர் அவர்கள் பாராளுமன்றத்திற்கு வருகின்றார்கள். நான் எனது வாழ்நாளில் ஹுஸூர் அவர்களை முதன் முறையாகப் பார்ப்பேன் என்று கூறிய அவர் மிகவும் உணர்வுப் -பூர்வமாக காணப்பட்டார். அவரைப் பார்த்து நானும் உணர்ச்சிவசப் -பட்டேன். பாராளுமன்ற உறுப்பினரான என்ட்ரியோல்ஸ்லி அவர்களுடன் ஹுஸூர் அவர்களின் இந்த சந்திப்பு 11.00 மணி 10 நிமிடங்கள் வரை நீடித்தது.*

*(தொடரும்...)*

---

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

நோன்புகளின் காரணமாக அல்லாஹ்வை சந்திக்கும் நற்பேறு கிடைக்கும்போது ஏற்படும்.

(புகாரி கிதாபுஸ்ஸவ்ம் பாபு ஹல்யகூலு இன்னீ ஸாயிமுன் இஸா ஷதம)

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்

நோன்பின் உண்மை நிலையை மக்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர். அசல் விஷயம் இதுவாகும். எந்த நாட்டிற்கு மனிதன் செல்வதில்லையோ, எந்த உலகைப் பற்றி அவனுக்குத் தெரியாதோ அதன் நிலைமைகளை அவன் எவ்வாறு கூற முடியும்? நோன்பு என்பது மனிதன் அதில் பசியாகவும் தாகமாகவும் இருப்பது என்பதல்ல. மாறாக, அதற்கு ஓர் உண்மையும் அதன் தாக்கமும் இருக்கின்றது. அது அனுபவம் மூலமாக தெரிய வருகின்றது. மனிதனின் இயல்பில் இந்த விஷயம் இருக்கின்றது. அதாவது எந்த அளவு அவன் குறைவாக உண்கின்றானோ அதே அளவு ந.்.ப்ஸ் தூய்மையடைகின்றது. மேலும் கஷ்.்.ப் என்னும் ஆன்மீகக் காட்சிகளைக் காண்கின்ற ஆற்றல்கள் அதிகரிக்கின்றது. இதன் மூலமாக ஓர் உணவைக் குறைத்து இன்னொன்றை அதிகமாக்குவதே இறைவனின் நாட்டமாக இருக்கின்றது. இதற்கு எப்போதும் பசியுடன் இருக்க வேண்டும் என்பது மட்டும் பொருளல்ல என்பதை நோன்பாளி எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். மாறாக, இறைவனை நினைவு கூர்வதில் எப்போதும் அவர் ஈடுபட்டிருக்க வேண்டும். அதன் மூலம் (உலகிலிருந்து) துண்டிக்கப்படும் நிலையை அவர் பெற வேண்டும். எனவே, மனிதன் உடலை வளர்க்கின்ற ஓர் உணவை விட்டு விட்டு ஆன்மாவின் திருப்திக்கும் நிறைவிற்கும் காரணமாக இருக்கின்ற இன்னோர் உணவைப் பெறுவதே நோன்பின் குறிக்கோளாகும். எனவே எந்த மக்கள் வெறும் சடங்கு என்ற ரீதியில் அல்லாமல் முழுக்க முழுக்க இறைவனுக்காகவே நோன்புகளை நோற்கின்றனரோ அவர்கள் அல்லாஹ்வை புகழ்வதிலும் அவனை தஸ்.்.பீஹ் செய்வதிலும் தஹ்மீலிலும் (லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவதிலும்) ஈடுபட்டிருக்க வேண்டும். இதன் மூலமாக மற்றோர் உணவு அவர்களுக்குக் கிடைத்து விடும்.

(மல்.்.பூஸாத் தொகுதி 5 பக்கம் 106; 2003 ஆம் ஆண்டு பதிப்பு)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad